அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2024/2025

## தமிழ் - ஆண்டு 9

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடிகளாக மறைமலை அடிகளும் பரிதிமாற்கலைஞரும் விளங்கினர். மறைமலை அடிகள் தமிழ்மொழி, வடமொழி, ஆங்கிலம் என்பவற்றை நன்கு கற்றவர். அவர் வடமொழிக் கலப்பின்றி செம்மொழியாகிய தமிழைத் தூய மொழிநடையில் எழுதுவதோடு மற்றவர்களையும் தனித்தமிழில் பேசவும் எழுதவும் தூண்டினார். மறைமலை அடிகள் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடக்கி வைத்தார். எந்தவித வேறுபாடுகளுமின்றி மக்களுக்குத் தனித்தமிழில் சொற்பொழிவுகள் செய்தார். அத்துடன் சீர்திருத்தபணிகளையும் செவ்வனே செய்து வந்தார். சைவத்தையும் தமிழையும் மிகவுயர்வாகப் போற்றிப் பணி செய்தார். இவர் சிறுவர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை படித்தறியும் வகையில் பல நூல்களை எழுதினார். சிறுவர்களுக்கான செந்தமிழ் என்ற தலைப்பில் பாடநூல்களை உருவாக்கினார். இவரது 'அறிவுக்கொத்து' என்ற நூலே மாணவரிடையே கட்டுரை எழுதும் முறையை உருவாக்கியது.